1973 டிசம்பர் 3]

அரிசனக் குடியிருப்புகளுக்கு மேல்நிலை குடிநீர்த்தொட்டிகள்

* 587 **வினா—திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கும்முடிபூண்டி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள சூரபூண்டி அரிசனக் காலனியில் மேல்நிலைக் குடிநீர்த்திட்டம் அமைவதில் ஏற்படும் காலதாமதத்திற்குக் காரணம் என்ன?

(இ) இது எப்போது முடிவடையும்?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) கும்முடிபூண்டி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள சூரபூண்டி அரிசனக் காலனியில் மேல்நிலை குடிநீர்த்திட்டம் அமைக்கும் செயற்குறிப்பு ஒன்றும் இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. கா. வேழவேந்தன் : இப்படி அமைப்பதற்கு வேண்டிய நிதி வசதி இல்லாத காரணத்தால் குடிநீர் வாரியத்தின் மூலமாக எல்லாக் கிராமங்களுக்கும், ஊராட்சிகளுக்கும் கடன் தந்து இந்த திட்டத்தை மேற்கொள்ள வேண்டுமென்று கருத்தரங்கில் சொல்லப் பட்டது எந்த நிலைமையில் இருக்கிறது?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : ஊராட்சிகளுக்குக் கடன் கொடுக்க வேண்டுமென்ற கருத்தறிவிக்கப்பட்டிருக்கிறது. அதைத் திருப்பிக் கொடுக்கிற வசதி, வாய்ப்புகள் இருக்கின்றனவா என்பதைப் பற்றி ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள்.

* 588 **வினா—திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கும்முடிபூண்டி நகரப் பஞ்சாயத்தில் உள்ள வெட்டிக் காலனி அரிசன மக்களுக்கு மேல்நிலைக் குடிநீர் திட்டம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

(இ) ஆம் எனில், இது எப்போது முடிவடையும்?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.